www.padippakam.com



# சென்னை நிர்வாகத்தில் யாழ்ப்பாணம்

45


18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் தங்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்ட ஆங்கிலேயர்கள் அதைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்காக இலங்கையைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். கடலை ஆள்பவனே த்ரையை ஆளமுடியும் என்ற கருத்து மேலோங்கியிருந்த காலம் அது. அத்திலாந்திக் சமுத்திரத்தில் ஸ்பானியர்கள் போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள் என்று பலரை தோற்கடித்துவிட்டாலும் தங்களுக்குத் தொடர்ந்து தொல்லை தந்துகொண்டிருக்கும் நெப்போலியன் மீதும் பிரெஞ்சுக் கடற்படை மீதும் அவர்களுக்கு அச்சம் இருந்தது.

தங்களது சாம்ராச்சியத்துக்கு பொன்னையும் பொருளையும் அள்ளித்தரக்கூடிய இந்தியாவை பிரெஞ்சுக் கடற்படை பிடித்துவிடும் என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. அரபிக் கடலில் இந்தியாக் கேற்றை தாங்கள் பாதுகாப்பாக வைத்திருந்தாலும் இந்து சமுத்திரத்தின் முத்தாக இருக்கும் இலங்கையைக் கைப்பற்றுவதன் மூலம் அதாவது கடற்படைக்கு முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையைக் கைப்பற்றுவதன் மூலம் பிரெஞ்சுக்காரர்கள் தென்பகுதிக்கூடாக இந்தியாவிற்குள் நுழைந்துவிடுவார்கள் என்று அவர்கள் அஞ்சினார்கள். அத்திலாந்திக் சமுத்திரத்தில் தங்களால் சுலபமாகத் தோற்கடிக்கப்பட்ட ஒல்லாந்துக் கடற்படையை பிரெஞ்சுக்காரர்கள் இலங்கையில் வைத்து சுலபமாகத் தோற்கடித்துவிட்டு அதை கைப்பற்றிவிடுவார்கள் என்று அவர்கள் பயந்தார்கள்.

அதனால் அவர்கள் முந்துவதற்கு முன்பாக தாங்கள் இலங்கையைக் கைப்பற்ற முடிவு செய்து கி.பி 1795ம் ஆண்டு முதலில் திருகோணமலை மீதும் மட்டக்களப்பின் மீதும் படையெடுத்து அங்கிருந்த ஒல்லாந்துக் கடற்படையைத் தோற்கடித்து திருமலை பிரடெரிக் கோட்டையையும் மட்டக்களப்புக் கோட்டையையும் கைப்பற்றினார்கள்.

அதன் பின் அதே ஆண்டு செப்டெம்பர் மாதம் 27ம் திகதி ஆங்கிலேயக் கடற்படைக் கப்பல்கள் பருத்தித்துறைத் துறைமுகத்தில் வந்து நங்கூரமிட்டன. அன்றே அங்கு தரையிறங்கிய ஆங்கிலேயப்படையினர் மறுநாள் காலை அதாவது 1795 செப்டம்பர் 28-ம் திகதி ஒல்லாந்தரின் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டனர். அந்த முற்றுகைக்குத் தலைமை தாங்கிய ஆங்கிலேயப் படைத் தளபதியாகிய கோர்ணல் ஸ்ருவார்ட் கோட்டைக்குள் இருப்போரை சரணடையுமாறு அறிவித்தான்.

அப்போது யாழ்ப்பாணக் கோட்டைக்கு பொறுப்பாக இருந்த ஒந்துத் தளபதியான கம்மாந்தர் றாகெட் (RAKET) டால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆங்கிலேயப் படைகளை எதிர்க்கும் அளவுக்கு தம்மிடம் பலமில்லை என்பதை உணர்ந்து கொண்ட அவன் தன்னோடு கோட்டைக்குள் இருந்த 39 ஒல்லாந்தர்களோடும் 98 இந்தியச் சிப்பாய்களோடும் வெளியே வந்து ஆங்கிலேயத் தளபதி கோர்ணல் ஸ்ருவாட்டிடம் சரணடைந்தான். ஆங்கிலேயர்கள் இரத்தம் சிந்தாமல் துப்பாக்கிக் குண்டுகளையோ பீரங்கிக் குண்டுகளையோ செலவழிக்காமல் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்.




யாழ்ப்பாண இராச்சியத்தை போர்த்துக்கேயர்கள் கைப்பற்றிய போது தமிழர்களின் சார்பில் அவர்களை எதிர்த்துப் போரிட்டு இழந்த இராச்சியத்தை மீட்பதற்கான சில முயற்சிகள் நடந்தன. போர்த்துக்கேயர்களிடமிருந்து ஒல்லாந்தர்கள் அதைக் கைப்பற்றியபோது அவ்வாறான பெரிய எதிர்ப்புகள் எதுவும் எழவில்லை. போர்த்துக்கேயர்கள் சிலருடன் சேர்ந்து தமிழ்ப் பிரமுகர்கள் ஒல்லாந்தர் ஆட்சியைக் கவிழ்க்க முயன்ற ஒரு சம்பவம் நடந்தது. ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயர்கள் ஆட்சியைக் கைப்பற்றிய போது தமிழர்கள் தரப்பிலிருந்து இழந்த ஆட்சியுரிமையை மீட்பதற்கான எந்தவிதமான முயற்சிகளுமே இருக்கவில்லை.

போர்த்துக்கேயர் ஆட்சியில் ஆரம்பித்து ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக் காலம்வரை யாழ்ப்பாணப் பிரமுகர்கள் ஆட்சியில் இருப்பவர்களை எதிர்த்து உரிமைப் போராட்டம் நடத்துவதை விட அவர்களுக்கு விசுவாசமாக நடந்தால் எவ்வாறு பட்டங்களையும் பதவிகளையும் சன்மானங்களையும் பெறலாம் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். இது ஒரு கலையாகவே வளர்ந்தது என்று சொல்லலாம். எனவே ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட போது புது எஜமானுக்கு எப்படி விசுவாசமாக நடந்து கொள்ளலாம் எப்படி அவனது நம்பிக்கையைப் பெறலாம் என்பது பற்றியே அவர்களது கவலை இருந்தது. இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து வந்த தங்களது ஆட்சியுரிமை யாழ்ப்பாணம் வன்னி என்றும் நாடுகள் அடங்கிய தமிழீழ தேசத்தின் இறைமை பற்றியெல்லாம் அவர்கள் கணக்கிலெடுக்கவில்லை என்பது மட்டுமல்ல அதைப்பற்றி சிந்திக்கவேயில்லை.

> **போர்த்துக்கேயர் ஆட்சியில் ஆரம்பித்து ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக் காலம்வரை யாழ்ப்பாணப் பிரமுகர்கள் ஆட்சியில் இருப்பவர்களை எதிர்த்து உரிமைப் போராட்டம் நடத்துவதை விட அவர்களுக்கு விசுவாசமாக நடந்தால் எவ்வாறு பட்டங்களையும் பதவிகளையும் சன்மானங்களையும் பெறலாம் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். இது ஒரு கலையாகவே வளர்ந்தது**

கி.பி. 1796-ம் ஆண்டு பெப்ரவரி 14-ம் திகதி ஆங்கிலேயக் கடற்படை கொழும்புக் கோட்டையையும் கைப்பற்றியதும் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சி முடிவுக்கு வந்தது. அதன்பின் சென்னையைத் தலைநகராகக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பனி அரசாங்கத்தின் கீழ் கண்டியைத் தவிர்ந்த இலங்கையின் மற்றைய பகுதிகள் வந்தன. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய பிராந்தியங்களின் ஆளுனராக அப் பகுதி படையெடுப்புக்களுக்குத் தலைமை தாங்கிய கோர்ணல் ஜேம்ஸ் ஸ்ருவார்ட் நியமிக்கப்பட்டான். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தைப் போலவே அவனது நிர்வாகத்திலும், கொழும்பு, கோட்டை, காலி ஆகியன ஒரு தனி நிர்வாகப் பிரிவாகவும், யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு பிறிதொரு நிர்வாகப் பிரிவாகவும் இருந்தன.

கோர்ணல் ஸ்ருவார்ட் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காக போர்த்துக்கேயர் காலத்தில் கொண்டுவரப்பட்டு, பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் கொஞ்சம் தளர்த்தப்பட்ட மதக் கட்டுப்பாடுகளை இன்னும் தளர்த்துமாறு உத்தரவிட்டான். இதன் முதற்படியாக, மக்கள் தாங்கள் விரும்பிய மதத்தைக் கடைப்பிடிக்கலாமென்றும், மக்களை கிறிஸ்தவ மதத்தில் சேர்க்கும் முயற்சிகளுக்கு கத்தோலிக்க மத குருமார், தங்களது முழுமையான பணியைத் தொடரலாம் என்றும் அறிவித்தான். ஒல்லாந்தர் காலத்தில் அவர்களது திருத்தியமைக்கப்பட்ட கிறிஸ்தவ மதம், அதாவது புரொட்டஸ்தாந்து மதமே அமுலில் இருந்ததால் கத்தோலிக்க மத குருமார் மதப் பிரச்சாரம் செய்வது தடை செய்யப்பட்டிருந்தது.

இதைவிட போர்த்துக்கேயர்கள் காலத்தில் தடை செய்யப்பட்ட இந்து மதத்தை ஒல்லாந்தர்கள் தமது ஆட்சியின் இறுதிக் காலப் பகுதியில் தளர்த்தியமை என்பது அரசியல் நோக்கத்தைக் கொண்டதாக இருந்தது எனச் சொல்லப்படுகின்றது.

அதாவது போர்த்துக்கேயர்கள் இந்து மதத்தைத் தடை செய்தபோது, இந்து மதத்தின் தனிச் சொத்தாக இருந்த சாதி அமைப்பும் நெருக்கடிக்குள்ளாக ஆரம்பித்தது. சாதி அமைப்பு தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாகித் தகரும் பட்சத்தில் அது தமிழ் மக்களை தங்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்துவிடச் செய்துவிடும் என்பதைப் புரிந்துகொண்ட ஒல்லாந்தர்கள் அதை தளர்த்தினர். ஆங்கிலேயர்கள் மக்களின் மத உணர்வுகளைத் தாங்கள் மதிப்பவர்கள் போலக் காட்டிக் கொண்டு, இந்து மதத்துக்கெதிரான தடையை முழுவதுமாகத் தளர்த்தி இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட தமிழ் சாதிய அமைப்பு தகர்ந்து விடாமல் பாதுகாப்பதன் மூலம், அதாவது தமிழர்களுக்கிடையேயுள்ள முரண்பாடுகளை அப்படியே பேணிக் காப்பாற்றுவதன் மூலம் தங்களது காலனிய ஆட்சிக்கு எதிராக் அவர்கள் கிளர்ந்தெழாதவாறு பார்த்துக் கொண்டார்கள்.

**- நக்கீரன்**